# TNPSC

# Group II-A Mains

## CLASSES |TEST SERIES

**11,000 Questions**

**Batch Starts 23 September**

- Unit Test - 45
- Revision - 5
- Model- 5
- Total Test - 55

- Detailed Explantion for better understanding
- Preparation Target with Strict Schedule
- Offline |online Test Series
- Personolised Mentorship for Improvement
- Each Test 200 questions GS+CA+GT+GE+Reasoning

CHENNAI | SANKARANKOVIL|TENKASI

9952521550 -9840281550

# GROUP-IIA MAINS

## CLASSES

Classes for General Studies and Current Affairs will be conducted by Iyachamy Murugan. Each session will include a detailed micro-syllabus and comprehensive notes, aligned with the updated syllabus. The classes will be held in a hybrid format—both online and offline—offering flexibility and accessibility for all students. Classes for Reasoning , Language also included.

## TEST

In each test, questions will follow recent TNPSC trends, including Incorrect/Correct Pair Identification, Matching, Assertion and Reasoning, True/False, Multiple-Statement Selection, and Choose the Correct Match. Tests will be conducted Online Platform - Answers you will get in PDF formats.

### 1 UNIT TEST

- General Studies (GS): 75 Questions
- Current Affairs: 25 Questions
- Reasoning: 40 Questions
- General Tamil OR General English: 60 Questions

### 2 REVISION TEST

- General Studies (GS): 75 Questions
- Current Affairs: 25 Questions
- Reasoning: 40 Questions
- General Tamil OR General English: 60 Questions

### 3 MODEL TEST

- General Studies (GS): 90 Questions
- Current Affairs: 10 Questions
- Reasoning: 40 Questions
- General Tamil OR General English: 60 Questions

# GROUP II-A MAINS

## TEST 1 - பொதுத்தமிழ்

## ANALOGY

## பொருத்துதல் - பொருத்தமான பொருளைத் தேர்வு செய்தல், புகழ் பெற்ற நூல், நூலாசிரியர்.

**எட்டுத்தொகை நூல்கள்**

எட்டுத்தொகை அல்லது தொகை நூல்கள் என்பவை சங்க இலக்கியத்தில் பலராலும் பல காலகட்டங்களில் எழுதப்பட்டுப் பின்னர் ஒருசேரத் தொகுக்கப்பட்டவை. இவற்றில் பல பாடல்களில் அவற்றை எழுதியவரது பெயர் காணப்படவில்லை. அகத்தையும் புறத்தையும் பற்றிப் பாடல்களாக இந்நூல்களைப் பகுக்கின்றனர். தொழில், அளவு, பாட்டு, பொருள் ஆகியவற்றால் தொகுக்கப்பட்டமையால் தொகை எனப் பெயர் பெற்றது. இத்தொகையுள் ஏறத்தாழ 2352 பாடல்களை 700 புலவர்கள் பாடியுள்ளனர். இவர்களில் 25 அரசர்களும், 30 பெண்பாற்புலவர்களும் உண்டு. ஆசிரியர் பெயர் தெரியாப் பாடல்கள் 102.

எட்டுத்தொகை நூல்களுள் பரிபாடலும், கலித்தொகையும் தவிர்த்து மற்றவை ஆசிரியப்பாவால் அமைந்து சில சமயம் வஞ்சிப்பாவால் வரப்பெற்று அமைந்துள்ளன. 3 அடிகள் சிற்றெல்லையாகவும் 140 அடிகள் பேரெல்லையாகவும் பெற்றுள்ளன. இந்நூல்கள் கடைச் சங்க காலத்தில் இயற்றப்பட்டன என்பர். தொகுக்கப்பட்ட காலம் கி.பி.3 அல்லது 4 ஆம் நூற்றாண்டு என்றும் கருதுவர்.

எட்டுத்தொகை நூல்களைப் பற்றிய வெண்பா பின்வருவது:

***நல்நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு***
***ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்***
***கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று***
***இத்திறத்த எட்டுத் தொகை***

**பொதுவான அம்சங்கள்**

- அகப்பொருள் பற்றியவை: நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு.
- புறப்பொருள் பற்றியவை : புறநானூறு, பதிற்றுப்பத்து.
- அகமும் புறமும் கலந்து வருவது:பரிபாடல்.

- அகப்பாடல்கள் அனைத்தும் முழுமையாகக் கிடைத்துள்ளன. புறப்பொருட் பாடல்களுள் சில அழிந்தும், சில சிதைந்தும், பாடவேறுபாடுகள் மிகுந்தும் காணப்படுகின்றன.
- பரிபாடலில் எட்டு பாடல் அகம் பற்றியன. இவை கடவுள் பற்றிய பாடல்களாகவும், தனிப்பாடல்களாகவும், ஆசரியப்பாவாலியன்றவை.
- புறநானுற்றில் வஞ்சிப் பாடல்கள் சிலவுள்ளன. இடத்திற்கேற்ப தேவையான துறைகளுள் பாடல்களைப் பாடியுள்ளனர்.
- புறத்திணைகளுள் வாழ்க்கைக்கு என்றும் இன்றியமையாத அறங்களையும், ஒழுக்கங்களையும் வலியுறுத்தும் பாடாண் முதலிய துறைகளைப் பாடியுள்ளனர்.
- கிடைத்த பாடல்களில் குறிஞ்சி,முல்லை, மருதம், நெய்தல் என நான்கு திணைகட்கும் நான்கு நூறு என ஒரு வகையாகத் தொகை கொண்டனர்.
- ஐங்குறுநூற்றுள் பாலைக்கும் ஒரு நூறு கொண்டனர். பிற்காலத்தார் நான்கு திணைப் பாடல்களை ஐந்திணைக்கும் பலவகையாகப் பிரித்திருக்கக்கூடும். பாடலகளின் அடியளவுகளைக் கொண்டு பல தொகை நூல்களைத் தொகுத்துள்ளனர்.
- 3அடிச் சிறுமையும் 6அடிப் பெருமையுமுடைய பாடல்களை ஐங்குறுநூறு என்றனர். ஐந்து புலவர்கள் நூறுநூறாக பாடிய தனித்தன்மையையும் உடையது இத்தொகை நூல். சேரமான் யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையென்ற சேரன் ஆதரவால் கூடலூர்க்கிழார் இதனைத் தொகுத்தார்.
- 4-8 அடியெல்லையினையுடைய பாடல்களைக் குறுந்தொகை ஆக்கினர். 9-12 அடிப்பாடல்கள் நற்றிணையாக அமைந்தன. 13-31 அடிப்பாடல்கள் நெடுந்தொகையாய் அகநானூறு ஆயின.
- அகத்திற்கு நானூறு என்பதற்கேற்ப புறத்திற்கும் நானூறு பாடல்களைத் தொகுத்தனர். புறநானூறும், பதிற்றுப்பத்தும் புறத்தை பற்றியன. மற்றவை அகம் பற்றியன.
- சிறப்பாக ஒரு பகுதியைப் பேசினாலும் திணை நூல்களின் பாடல்களை அறம், பொருள் ,இன்பம் என்னும் முப்பகுதிகளைப் பற்றிய உண்மைகளை இடையிடையே தம்முள் விரவப் பெற்றுள்ளன.
- புறப்பாடல்களில் அரசரின் போர்கள், கொடை ஆகியவை பற்றியும், அகப்பாடல்களில் வாழ்க்கைக்குரிய ஒழுக்கவுண்மைகளைப் பற்றியும் அரிய குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.
- கடையெழு வள்ளல்களைப் பற்றிய குறிப்புக்கள் புறநானூற்றிலும் அகப்பாடல்களிலும் மிகுதியாகக் காணப்படுகின்றன.தம்மைப் புரந்த வள்ளல்களை நன்றியுடன் குறிப்பிடும் குறிப்புகளே இவை.
- கடைச்சங்கத் தொடக்கத்தில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும், கரிகாலனும் இலங்கியுள்ளனர். அக்காலத்தே ஆண்ட சேர, சோழ, பாண்டியர், சிற்றரசர்கள் குறுநில மன்னர் ஆகியயோரைப் பற்றிய குறிப்புகள் புறநானூற்றில் மிகுதியாகவும் அகநூல்களில் ஓரிரு வரிகளாகக் கலந்தும் காணப்படுகின்றன.
- பொதுவாக எட்டுத்தொகை நூல்களில் பண்டைத் தமிழ் அரசர்களின் போர்த்திறங்களையும், வரையாது வழங்கும் வள்ளன்மைப் பண்பையும், மறக்குடி மளிரின் மாண்பினையும், போர்த் தவிர்க்க இடைநின்ற சான்றோர்களின் இயல்புகளையும், ஐந்திணைக்குரிய அன்பொழுக்கங்களையும்,புராணச் செய்திகளையும், வரலாற்றுக் குறிப்புகளையும் அறியலாம்.

- சங்க நூல்களை எட்டுத்தொகை என்றும், பத்துப்பாட்டு என்றும் பகுத்துக் காண்கின்றனர். பத்துப்பாட்டுத் தொகுப்பில் உள்ள 10 பாட்டுகளும் தனித்தனி முழுமையான பாட்டுகள்.

எட்டுத்தொகையில் உள்ள எட்டு நூல்களும் தொகைநூல்கள். அதாவது தொகுக்கப்பட்ட நூல்கன். பல புலவர்கள் பாடிய பாடல்கள் ஒவ்வொரு தொகுப்பிலும் உள்ளன. ஒவ்வொரு நூலையும் தொகுத்தவர் யார்? தொகுக்க உதவியவர் யார்? என்னும் செய்திகளை இங்குள்ள பட்டியலில் காணலாம்.

| தொகைநூல் | தொகுத்தவர் | தொகுப்பித்தவர் | குறிப்பு |
|---|---|---|---|
| அகநானூறு(அகம்), (அகப்பாட்டு), (நெடுந்தொகை) | மதுரை உப்புரிகுடி கிழான் மகனாவான் உருத்திர சன்மன் | பாண்டியன் உக்கிரப் பெருவழுதி | பாடலடி 13 முதல் 31 |
| ஐங்குறுநூறு | புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் | யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையார் | ஒவ்வொரு திணைக்கும் 100 பாடல், 5 திணைக்கும் 500 பாடல் |
| கலித்தொகை | நல்லந்துவனார் | புலப்படவில்லை | 5 திணைக்கும் கலிப்பாவால் அமைந்த பாடல்கள் உள்ளன |
| குறுந்தொகை | பூரிக்கோ | பூரிக்கோ | பாடலடி 3 முதல் 8 |
| நற்றிணை | - | பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி | பாடலடி 9 முதல் 12 |
| பதிற்றுப்பத்து | தெரியவில்லை | தெரியவில்லை | அரசருக்கு 10 என்ற முறையில் 10 அரசர்கள்மீது 10 புலவர்கள் பாடிய 100 பாடல்கள், (முதல் பத்தும், பத்தாம் பத்தும் கிடைக்கவில்லை |
| பரிபாடல் (பரிபாட்டு) | தெரியவில்லை | தெரியவில்லை | திருமால் மீது 8 பாடல், செவ்வேள் மீது 31, காடுகாள்(கொற்றவை) மிது 1, வையை மீது 26, மதுரை மீது 4 - என்று 70 பாடல்கள் இருந்தன. |
| புறநானூறு (புறம்) | தெரியவில்லை | தெரியவில்லை | புறத்திணைப் பாடல்கள் |

**பத்துப்பாட்டு**

**பத்துப்பாட்டு** என்பதுசங்க இலக்கியங்கள் என்று குறிப்பிடப்படும் பழந்தமிழ் நூல்களின் தொகுப்புகளுள் ஒன்றாகும் , பத்துப்பாட்டு,எட்டுத்தொகை, இவை இரண்டும் பதினெண் மேல்கணக்கு நூல்களாகும்

இவற்றுள் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை,பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு,பட்டினப் பாலை, மலைபடுகடாம் ஆகிய பத்து நூல்கள் அடங்கிய தொகுப்பே **பத்துப்பாட்டு** என வழங்கப்படுகிறது. இவை அனைத்தும் இன்று ஒரே தொகுப்பாகக் குறிப்பிடப்படுகின்ற போதிலும், இவை ஒன்றுக்கொன்று தொடர்பற்றவை, வெவ்வேறு ஆசிரியர்களால் பல்வேறு கால கட்டங்களில் இயற்றப்பட்டவை. பத்துப்பாட்டு எனச் சேர்த்துக் குறிப்பிடும் வழக்கமும் பிற்காலத்தில் எழுந்ததென்பதே பலரது கருத்து. இந்த அரிய தொகுப்பிற்கு நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார்.

இத் தொகுதியிலுள்ள நூல்கள் சங்க இலக்கியங்களுள் சிறப்பிடம் பெறுபவை. இவற்றில் பழந்தமிழ் நாட்டின் வாழ்க்கை முறை, பண்பாடு பற்றிய பல அரிய தகவல்கள் பொதிந்து கிடக்கின்றன. வரலாற்றுச் சம்பவங்கள், அரசர்களினதும் வள்ளல்களினதும் இயல்புகள், பொது மக்களின் காதல் வாழ்க்கை,அக்காலக் கலைகள், நகரங்கள் பற்றிய தகவல்கள், இயற்கை பற்றிய வருணனைகள் போன்றவை தொடர்பான பல தகவல்களை இவற்றிலிருந்து பெற முடிகின்றது. பத்துப் பாட்டு நூல்களில் இயற்கைக்கு முரண்பட கற்பனைகளோ பொருந்தா உவமைகளோ காணப்பெறவில்லை. பண்டைத் தமிழ்ர் வாழ்வை உள்ளது உள்ளபடிக் கட்டும் காலக் கண்ணாடியாக இவை விளங்குகின்றன.

**'முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை**
**பெருகு வள மதுரைக் காஞ்சி-மருவினிய**
**கோல நெடுநல் வாடை கோல்குறிஞ்சிப்பட்டினப்**
**பாலை கடாத்தொடும் பத்து"**

என வரும் பழம்பாடல், பத்துப் பாடு நூல்கள் எவை என்பதை மிகத் தெளிவாகக் காட்டும்.

இத்தொகுப்பிலுள்ள பத்து நூல்களும் நீண்ட அகவற் பாக்களால் ஆனவை. இவற்றுள் 103 அடிகளைக் கொண்டமைந்த முல்லைப் பாட்டுக்கும், 782 அடிகளையுடைய மதுரைக் காஞ்சிக்கும் இடைப்பட்ட நீளங்களைக் கொண்டவையாக ஏனைய நூல்கள் அமைந்துள்ளன.

**"நூறடிச் சிறுமை நூற்றுப் பத்தளவே**
**ஏறிய அடியின் ஈரைம் பாட்டு**
**தொடுப்பது பத்து பாட்டெனப் படுமே**
அதுவே, அகவலின் வருமென அறைகுவர் புலவர்".-(பன்னிருபட்டியல் 266-267) என்பது இதன் இலக்கணமாகும்.

சுவடிகளில் எழுதப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வந்த இந் நூல்கள் பிற்காலத்தில் அழிந்துபோகும் நிலை எய்தியபோது பல சுவடிகளைச் சோதித்துத் தற்காலத் தமிழரும் பயன் பெறும் வகையில், டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் 1889 ஆம் ஆண்டு முதன் முதலாகப் பதிப்பித்து வெளியிட்டார். இதன் பின்னர் வேறும்

பலர் முழுத் தொகுதியாகவும், இதிலுள்ள நூல்களிற் சிலவற்றைத் தனித் தனியாகவும் புதிய உரைகளுடன் வெளியிட்டுள்ளனர்

| பத்துப்பாட்டு | |
|---|---|
| திருமுருகாற்றுப்படை | குறிஞ்சிப் பாட்டு |
| மலைபடுகடாம் | மதுரைக் காஞ்சி |
| முல்லைப்பாட்டு | நெடுநல்வாடை |
| பட்டினப் பாலை | பெரும்பாணாற்றுப்படை |
| பொருநராற்றுப்படை | சிறுபாணாற்றுப்படை |

**திருமுருகாற்றுப்படை -நெடுநல்வாடை (ஒப்புநோக்கம்)**

**திருமுருகாற்றுப்படை**

- ஞாயிறு தோன்றுவதைக் காட்டிக்கொண்டு தொடங்குகிறது.
- அருளைப் பெற ஆற்றுப்படுத்துகிறது. பிற ஆற்றுப்படைகள் பொருளைப் பெற ஆற்றுப்படுத்துகின்றன.பொருளைப் பெற ஆற்றுப்படுத்தும் பிற ஆற்றுப்படைகள்; பொருநர் ஆற்றுப்படை, சிறுபாண் ஆற்றுப்படை, பெரும்பாண் ஆற்றுப்படை, மலைபடுகடாம்
- தொல்காப்பிய மரபு பாடாண் திணையின் துறைகளில் ஒன்று ஆற்றுப்படை. 'கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும் ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப் பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇ சென்று பயன் எதிரச் சொன்ன பக்கம்' திருமுருகாற்றுப்படை முதுவாய் இரவலனை ஆற்றுப்படுத்துகிறது. 'அளியன் தானே முதுவாய் இரவலன்'(முருகு 384) இவனுக்கு அருள்புரிய வேண்டும் என்று கூளியர் முருகனுக்குப் பரிந்துரைப்பர் என்று குறிப்பிடப்படுவதால் இதனைப் 'புலவர் ஆற்றுப்படை' என்றும் கூறுவர். இது மலைபடுகடாம் நூலைக் 'கூத்தர் ஆற்றுப்படை' என்று கூறுவது போன்றது.

**நெடுநல்வாடை**

- குளிர் நடுக்கத்தைக் காட்டிக்கொண்டு தொடங்குகிறது
- பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாடியதாக அதன் கொளுக்குறிப்பு கூறுகிறது. பாடலில் அவன் பெயர் இல்லை. 'வேம்பு தலை யாத்த நோன் காழ் எஃகம்'ஒன்றை வைத்துக்கொண்டு அவனது மெயக்காப்பாளன் அவனுடன் வந்தான் என்று கூறப்படுவது ஒன்றே பாண்டியன் என்று கொள்வதறகான அடிப்படை. அரண்மனையில் அரசி பிரிவால் வாடுகிறாள். இது பாலை. பாசறையில் பாண்டியன் போரில் காயம் பட்டவர்களுக்கு ஆறுதல் கூறிக்கொண்டு காயம் பட்ட குதிரைகளையும், யானைகளையும் தேற்றிக்கொண்டிருக்கிறான்.வாடைக்காற்று இருவரையும் வருத்துகிறது.

- தொல்காப்பிய மரபு | 'வாகை தானே பாலையது புறனே' - தொல்காப்பியம் 'கூதிர் வேனில் என்று இரு பாசறைக் காதலின் ஒன்றிக் கண்ணிய மரபு' மேல் வாகைத்திணைப் பாடல் வரும் தொல்காப்பியம் இந்த நெறியில் அமைந்துள்ளது நெடுநல் வாடை

திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரரும் நெடுநல்வாடை பாடிய நக்கீரரும் ஒருவரா வெவ்வேறு புலவர்களா என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

**பொருநராற்றுப்படை**

பொருநராற்றுப்படை என்னும் ஆற்றுப்படை நூல் கரிகால் வளவன் எனப்படும் சோழ மன்னனைப்பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு இயற்றப்பட்டது. முடத்தாமக் கண்ணியார் என்பது இதன் ஆசிரியர் பெயர். இது 248 அடிகளைக் கொண்ட ஆசிரியப்பாவாலானது.

**சிறுபாணாற்றுப்படை**

நத்தத்தனார் என்னும் புலவரால் இயற்றப்பட்டது **சிறுபாணாற்றுப்படை** எனும் இந்நூல். இது 269 அடிகளாலமைந்தது. ஒய்மான் நாட்டு மன்னனான நல்லியக்கோடன் என்பவனைத் தலைவனாகக் கொண்டு எழுதப்பட்ட இந்நூல், அம்மன்னனிடம் பரிசு பெற்ற சிறுபாணன் ஒருவன் தான் வழியிற் கண்ட இன்னொரு பாணனை அவனிடம் வழிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

**பெரும்பாணாற்றுப்படை.**

500 அடிகளைக் கொண்டு அமைந்தது **பெரும்பாணாற்றுப்படை**. பேரியாழ் வாசிக்கும்பாணனொருவன் வறுமையால் வாடும் இன்னொரு பாணனைத் தொண்டைமான் இளந்திரையன்என்னும் மன்னனிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்தது இந்த ஆற்றுப்படை நூல். இதை ஆக்கியவர்கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்னும் புலவர்.

**நெடுநல்வாடை**

பாண்டிய மன்னன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டுமதுரையைச் சேர்ந்த நக்கீரர் என்னும் புலவரால் இயற்றப்பட்டதே **நெடுநல்வாடை** என்னும் நூல். இதுசங்கத் தமிழ் இலக்கியத் தொகுப்பான பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றாகும். நூலுள் எடுத்தாளப்பட்டுள்ள நிகழ்வுகள் வாடைக்காலத்தில் நிகழ்வதாலும், தலைவனைப் பிரிந்து வாடும் தலைவிக்கு இது நீண்ட(**நெடு**) வாடையாகவும், போர் வெற்றியைப் பெற்ற தலைவனுக்கு இது ஒரு **நல்ல** வாடையாகவும் அமைந்தது குறித்தே இது நீண்ட நல்ல வாடை என்னும் பொருளில் **நெடுநல்வாடை** எனப் பெயர் பெற்றதாகக் கூறுவர்.

இது ஒரு புறப்பொருள் நூலாகக் கொள்ளப்படினும் இதில் பெருமளவு அகப்பொருள் அம்சங்கள் பொதிந்துள்ளன. இந் நூல் அகப் பொருளையே பேசினாலும் புறப்பொருள் நூல்கள் வரிசையில் வைக்கப்பட்டுள்ளது. பொதுவாக தமிழ்ப் புலவர்(கள்) தம் அகப் பாடல்களில் தலைவன் தலைவி ஆகியோரின் அடையாளத்தை வெளிப்படுத்தாத கண்ணியத்தைக் காத்து வந்தனர். புறவாழ்வை அனைவருக்கும் கூறலாம். அகவாழ்வை அகிலமே அறியச்செய்வது அறிவுடைமை அன்று என்பது அவர்தம் அறிவுமுடிவாய் இருந்திருக்கிறது. ஆனால் நெடுநல்வாடையில் பாண்டியனின் அடையாளச் சின்னமாகிய வேம்பு நக்கீரரால் சுட்டப்பட்டுள்ளது. ஆகவே தான் தலைவன் பாண்டிய மன்னனாய்க் கொள்ளப்பட்டான். இந்நூலும் புறப் பொருள் நூலாயிற்று.

**குறிஞ்சிப் பாட்டு**

**குறிஞ்சிப் பாட்டு** கபிலர் என்னும் புலவர் பாடியது இப்பாடல். 261 அடிகளாலான இப் பாடல் அகப்பொருள் சார்ந்த பாடலாகும். தினைப்புலம் காக்கச் சென்ற தலைவி ஒரு ஆண் மகனிடம் மனதைப் பறி கொடுக்கிறாள். பல காரணங்களினால் அவனைச் சந்திக்க முடியாமல் தவிக்கும் தலைவியின் நிலையை, அவள் தாய்க்கு எடுத்து விளக்குகிறாள் அவள் தோழி. இதுவே குறிஞ்சிப் பாட்டின் உள்ளடக்கம்.

**முல்லைப் பாட்டு**

சங்கத் தமிழ் இலக்கியத்தில் பத்துப்பாட்டு என அழைக்கப்படும் தொகுதியின் ஒரு பகுதியே முல்லைப் பாட்டு. இத் தொகுதியுள் அடங்கியுள்ள நூல்களுள் மிகவும் சிறியது இதுவே. 103 அடிகளைக்கொண்ட ஆசிரியப்பா வகையில் இயற்றப்பட்டது. பாண்டிய அரசனான நெடுஞ்செழியனைப்பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு எழுதப் பட்டதாகக் கருதப்படினும், தலைவனுடைய பெயர் பாட்டில் குறிப்பிடப்படவில்லை.

முல்லைப்பாட்டு முல்லைத் திணைக்குரிய நூல், அகப்பொருள் பற்றியது. மழைக்காலத்துக்குமுன் திரும்பிவருவதாகச் சொல்லிப் போருக்குச் சென்ற தலைவன் குறித்த காலத்தில் வரவில்லை. தலைவியோ பிரிவுத் துயரம் தாழாமல் உடல் மெலிந்து வாடுகிறாள். விபரமறியச் சென்று வந்த தோழியரின் உற்சாக வார்த்தைகள் அவள் ஏக்கத்தைக் குறைக்கவில்லை. போரில் வெற்றி பெற்றுத் தலைவன் திரும்பியதும் தான் தலைவி ஆறுதலடைந்து இன்பமுறுகிறாள். இந்த நிகழ்ச்சிகளைக் கருவாகக் கொண்டு நப்பூதனார் என்னும் புலவர் கவிநயத்தோடு எழுதியதே முல்லைப்பாட்டு.

**மதுரைக் காஞ்சி**.

சங்கத் தமிழ் பாடல் தொகுப்பான பத்துப்பாட்டு என்னும் தொகுப்பில் அடங்குவது **மதுரைக் காஞ்சி**. இத் தொகுப்பில் உள்ள நூல்களுள் மிகவும் நீளமானது இதுவே. மாங்குடி மருதனார் என்னும் புலவர் இந் நூலை இயற்றியுள்ளார். இப்பாடலில் 782 அடிகள் உள்ளன. பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்குஉலகியல் உணர்த்துவதாய் இப்பாடல் பாடப்பட்டுள்ளது. பாண்டி நாட்டின் தலைநகரமான மதுரையின்அழகையும், வளத்தையும் கூறுகின்ற இந்நூல், அந்நாட்டின் ஐவகை நிலங்களைப் பற்றியும் கூறுகின்றது. இப்பாட்டின்

தொடக்கத்தில் திரைகடல் சூழ்ந்த ஞாலம் பற்றிப் பாடும் புலவர் பிறகு தேன் கூடுகள் நிறைந்திருக்கும் மலையுச்சிகளைப் பற்றியும் கூறுகிறார். இந்த உவமைகள் இயற்கை வளம் குறித்துப் பாடும் பொருட்டு அமைந்தவை அல்ல. வாழ்க்கை அலை போன்று நிலையில்லாதது. எனவே நல்லறங்கள் செய்து மலை போல் என்றும் அழியாப் புகழைத் தேடிக்கொள் என்று மன்னனுக்கு மறைமுகமாய்க் கூறுகிறார்.

**போரின் கொடுமையை விளக்குதல்**

பெரும்பாலான புலவர்கள் மன்னனின் போர்த்திறத்தையும் போரில் பகைவரைக் கொன்றழித்ததையும் கொன்றழித்த நாட்டுக் கோட்டையை அழித்து அங்கே எள் மற்றும் திவசங்கள் விதைத்ததையும் பாடுவர். மருதனாரோ போரின் கொடுமையையும் போரினால் நாடு பாழாவதையும் பாடுகிறார்.

*நாடெனும்பேர் காடுஆக*

*ஆசேந்தவழி மாசேப்ப*

*ஊர் இருந்தவழி பாழ்ஆக*

போரினால் நாடாக இருந்த இடம் காடாகும். பசுக்கள் திரிந்த வழியில் புலிகள் உலவும். ஊர் முழுதும் பாழாகும் என்று சொல்கிறார்.

**நாளங்காடி அல்லங்காடி**

சங்க காலத்திலும் மதுரை தூங்கா நகராய் விளங்கியதை மருதனார் மூலம் அறிய முடிகிறது. பகல் நேரக் கடைகளாகிய நாளங்காடி பற்றியும் இரவு நேரத்தில் திறக்கப்படும் அல்லங்காடி (அல் – இரவு; அல்லும் பகலும்) பற்றியும் விளக்குகிறார். கடல் நீர் ஆவியாகி மேகமாவதால் கடல் வற்றிவிடுவதில்லை. ஆறுகள் பல கடலில் வந்து கலப்பதால் கடல் பொங்கி வழிவதுமில்லை. அது போல் மக்கள் திரளாக வந்து பொருட்களை வாங்குவதால் பொருட்கள் தீர்ந்து விடுவதும் இல்லை; பல இடத்திலிருந்தும் வணிகர்கள் விற்பனைக்குப் பொருட்களைக் கொண்டு வருவதால் பொருட்கள் மிகுந்து விடுவதும் இல்லை என்கிறார்.

*மழைகொளக் குறையாது, புனல்புக மிகாது*

*கரைபொருது இரங்கும் முந்நீர் போல,*

*கொளக்கொளக் குறையாது. தரத்தர மிகாது.*

***ஓர் இரவு***

ஓர் இரவு முழுதும் மதுரை நகரில் நடக்கும் செயல்கள் யாவற்றையும் மருதனார் கூறுகிறார். குலமகளிர் பண்புகள், விலைமகளிர் வேலைகள், கள்வர் திறம், காவலர் மறம் ஆகியவற்றைக் கூறி நிறைவாக மன்னன் இரவில் துயில் கொள்ளல், காலையில் பள்ளியெழுச்சி, அவனது கொடை, அறம் ஆகியவற்றை விளக்கி அவனை வாழ்த்திப் பாடலை நிறைவு செய்கிறார்.

**பட்டினப்பாலை**

**பட்டினப்பாலை** என்பது சங்ககாலத்துத் தமிழ் நூல் தொகுப்பான பத்துப்பாட்டில் அடங்கிய ஒரு நூல் .பெரும்பாணாற்றுப்படை என்னும் நூலைப் பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்னும் புலவரே இதனையும் இயற்றியுள்ளார். பண்டைய சோழ நாட்டின் சிறப்பு, சோழ நாட்டின் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பு,அதன் செல்வ வளம், கரிகாலனுடைய வீரச்செயல்கள், மக்கள் வாழ்க்கை முறை ஆகியவற்றை எடுத்து இயம்பும் இப்பாடல் 301 அடிகளால் அமைந்துள்ளது. இப் பாடலில் சோழ மன்னன் கரிகால் பெருவளத்தானின் பெருமைகளை எடுத்துக்கூறுகிறார் புலவர். கரிகால் சோழன் திரைக்கடலில் நாவாய்கள் பல செலுத்தி, சுங்க முறையை ஏற்படுத்தி, வெளிநாடுகளுடன் வாணிபத்தொடர்பு ஏற்படுத்தி தமிழகத்திற்கு உலகப்புகழை ஏற்படுத்தியவன். அவன் ஆண்ட சோழப் பேரரசின் தலைநகரமாக விளங்கியது காவிரிப்பூம்பட்டினம். கரிகால் சோழனுடைய காவிரிப்பூம்பட்டினத்தின் பெருஞ்சிறப்பைச் சொல்வதே பட்டினப்பாலை ஆகும்.

சங்க நூலாகிய பத்துப்பாட்டு வரிசையில் ஒன்பதாவது பாட்டு பட்டினப்பாலையாகும். பட்டினப்பாலையின் செய்யுள்கள் இடையிடையே வஞ்சிப்பாவின் அடிகள் விரவி இருந்தாலும் ஆசிரியப்பாவால் இயன்றவை.

**பட்டினம்**

துறைமுகத்தை ஒட்டியுள்ள பெரு நகரங்கள் பட்டினம் என அழைக்கப்பட்டன. காவிரிப்பூம்பட்டினம் சோழ நாட்டின் பழம்பெரும் நகரமாகும். தலைநகரமாக விளங்கிய துறைமுகப்பட்டினம். இதுதமிழகத்தில், தஞ்சாவூர் மாவட்டத்தில் கீழ்க்கோடியிலே காவிரி நதி கடலோடு கலக்கும் இடத்தில் உள்ளது. இப்போது இது ஒரு சிறிய ஊராகும். ஏறக்குறைய ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன் இந்த நகரம் கடலிலே மூழ்கி விட்டதாகச் சொல்லப்படுகிறது. ஐம்பெருங்காப்பியங்களிலே ஒன்றான மணிமேகலையில் காவிரிப்பூம்பட்டினம் கடலில் மூழ்கிய செய்தி காணப்படுகிறது.

**பாலை**

பாலை என்பது பாலைத்திணை ஆகும். பிரிவைப் பற்றிக் கூறுவது பாலைத்திணையாகும் . கணவன் தன் மனைவியை விட்டுப் பிரிந்து போவது- அல்லது பிரிந்து போக நினைப்பது- அல்லது பிரிந்து போக வேண்டுமே என நினைத்து வருந்துவது இவை பாலைத்திணையின்கண் அடங்கும். கணவன் தான் பொருள் தேடப் பிரிந்து செல்வதைத் தன் மனைவிக்கு அறிவிப்பதும், அதை அவள் தடுப்பதும் பாலைத் திணையில் அடங்கும். பட்டினப்பாலை என்பது பட்டினம்- பாலை என்ற இரு சொற்களைக் கொண்ட தொடர். "பட்டினத்தின் சிறப்பைக் கூறிப் பிரிவின் துன்பத்தை உணர்த்துவது" என்பது இதன் பொருளாகும்.

**பாட்டின் அமைப்பு**

பொருள் தேடப் பிரிந்து செல்ல நினைக்கின்றன் தலைவன். பிரிந்து சென்றால் தன் காதலியின் நிலை என்ன அகும்? அவள் தன் பிரிவைப் பொறுப்பாளா? தான் திரும்பும் வரை அவள் உயிர்கொண்டு உறைவாளா? என்ற ஐயம்

அவன் உள்ளத்திலே எழுந்து அவனை வாட்டுகின்றன. பிரிந்து சென்றால் தானும் மன அமைதியோடு சென்ற இடத்தில் செயலாற்ற முடியாது. வேதனைதான் மிஞ்சும்; வேதனையோடு செய்யும் செயலில் வெற்றிகாண முடியாது. ஆகையால் பிரிவு காதலிக்குத் துன்பம் தருவதோடு தனக்கும் துன்பத்தைத் தரும் என நினைக்கிறான் இதனால்

" நான் பிரிந்து செல்ல நினைக்கும் காட்டு மார்க்கம், கரிகாற்சோழன் தன் பகைவர்களின் மேல் வீசிய வேல்படையைக் காட்டினும் கொடுமையானது. என்காதலியின் மெல்லிய தோள்கள் அந்தக் கரிகாற்சோழனுடைய செங்கோலைக் காட்டினும் குளிர்ச்சியைத் ( நன்மையை, இன்பத்தை)தருவன. ஆதலால் நீங்காத சிறப்பினையுடைய காவிரிப்பூம்பட்டினமே கிடைப்பதாஇருந்தாலும் கூட என் காதலியை விட்டுப் பிரிந்து வரமாட்டேன். என் மனமே! பிரிந்து போகவேண்டும் என எண்ணுவதை மறந்துவிடு".

என்ற முடிவுக்கு வருகிறான். இதுவே பட்டினப்பாலையின் அகப்பொருள்கருத்தாகும். இதனை

*"திருமாவளவன்*
*தெவ்வர்க்கு ஓங்கிய*
*வேலினும் வெய்ய கானம்;*
*அவன், கோலினும் தண்ணிய*
*தடம்மென் தோளே.*
*முட்டாச் சிறப்பின்*
*பட்டினம் பெறினும்*
*வாரிருங் கூந்தல்*
*வயங்கிழை ஒழிய*
*வாரேன் வாழிய நெஞ்சே."*

என்று வரும் பட்டினப்பலை அடிகளால் அறியலம்.

**மலைபடுகடாம்**.

சங்ககாலத் தொகுப்புகளுள் ஒன்றான பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று **மலைபடுகடாம்**. இத் தொகுப்பிலுள்ள நூல்களுள் இரண்டாவது பெரிய நூல் இது. 583 அடிகளால்ஆன இப் பாடலை இயற்றியவர், பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார் என்னும் புலவர் ஆவார்.

நவிர மலையின் தலைவனான நன்னன் என்பவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது இந்நூல். நவிர மலை மக்களின் வாழ்க்கை முறைகளையும், அவர்கள் தலைவனின்கொடைத் திறத்தையும் புகழ்ந்து பாடும் இந் நூற் பாடல்களில், அக்காலத் தமிழரின் இசைக்கருவிகள்பற்றியும் ஆங்காங்கே குறிப்புக்கள் காணப்படுகின்றன. நன்னனைப் பாடிப் பரிசு பெறச்செல்லும் பாணர், நெடுவங்கியம், மத்தளம், கிணை, சிறுபறை,

கஞ்சதாளம், குழல், யாழ் போன்ற பலவகை இசைக் கருவிகளை எடுத்துச் செல்வது பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

| நூல்கள் | ஆசிரியர்கள் |
|---|---|
| ஐம்பெருங்காப்பியங்கள் | |
| சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் |
| மணிமேகலை | சீத்தலைச் சாத்தனார் (பௌத்த சமய நூல்) |
| சீவக சிந்தாமணி | திருத்தக்க தேவர் |
| வளையாபதி | ஆசிரியர் தெரியவில்லை (சமணசமய நூல்): |
| குண்டலகேசி | நாதகுத்தனார் (பௌத்த சமய நூல்) |
| ஐஞ்சிறுங்காப்பியங்கள் | |
| யசோதர காவியம் (உயிர்க்கொலை தீது என்பதை வலியுறுத்த- வெண்ணாவலுடையார் எழுந்த நூல்) | |
| உதயணகுமார காவியம் | ஆசிரியர் தெரியவில்லை |
| நாககுமார காவியம் | ஆசிரியர் தெரியவில்லை |
| சூளாமணி (கவிதை நயத்தில் சிந்தாமணி - தோலாமொழித் தேவர் போன்றது | |
| நீலகேசி | வாமன முனிவர் (சமண சமய நூல்) |
| சீவகசிந்தாமணி நரிவிருத்தம் | திருத்தக்க தேவர் |
| பெருங்கதை | கொங்குவேளிர் |
| கம்பராமாயணம், ஏரெழுபது, சிலை எழுபது, திருக்கை வழக்கம், சரசுவதி அந்தாதி, சடகோபரந்தாதி, இலக்குமி அந்தாதி, மும்மணிக் கோவை | கம்பர் |
| பெரியபுராணம் | சேக்கிழார் |
| முத்தொள்ளாயிரம் | ஆசிரியர் தெரியவில்லை |
| நந்திக்கலம்பகம் | ஆசிரியர் தெரியவில்லை |
| பாரத வெண்பா | பெருந்தேவனார் |
| மேருமந்தர புராணம் | வாமன முனிவர் |
| வில்லி பாரதம் | வில்லிபுத்தூராழ்வார் |
| இறையனார் களவியல் உரை | நக்கீரர் |
| புறப்பொருள் வெண்பா மாலை | ஐயனரிதனார் |
| கந்தபுராணம் | கச்சியப்ப சிவாச்சாரியார் |
| வீரசோழியம் | புத்தமித்திரர் |

| | |
|---|---|
| சேந்தன் திவாகரம், திவாகர நிகண்டு | திவாகர முனிவர் |
| பிங்கல நிகண்டு | பிங்கல முனிவர் |
| உரிச்சொல் நிகண்டு | காங்கேயர் |
| நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் | |
| சூடாமணி நிகண்டு | மண்டல புருடர் |
| நேமிநாதம், வச்சணந்திமாலை, பன்னிரு பாட்டியல், (வெண்பாப் பாட்டியல்) | குணவீரபண்டிதர் |
| தண்டியலங்காரம் | தண்டி |
| யாப்பருங்கலம், யாப்பருங்கல விருத்தி, யாப்பருங்கலக்காரிகை | அமிர்தசாகரர் |
| நன்னூல் | பவணந்தி முனிவர் |
| நம்பியகப்பொருள் | நாற்கவிராச நம்பி |
| திருத்தொண்டர் திருவந்தாதி | நம்பியாண்டார் நம்பி |
| சந்திரவாணன் கோவை, சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ் | அந்தகக்கவி வீரராகவர் |
| திருவுந்தியார், திருக்களிற்றுப் பாடியார் | உய்யவந்தத் தேவர் |
| சிவஞான போதம் | மெய்கண்டார் |
| தில்லைக்கலம்பகம் | இரட்டைப்புலவர்கள் (இளஞ்சூரியர், முதுசூரியர்) |
| வினா வெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சு விடு தூது | உமாபதி சிவாச்சாரியார் |
| அரிச்சந்திர புராணம் | வீரகவிராயர் |
| மச்ச புராணம் | வடமலையப்பர் |
| இரட்சணிய யாத்திரிகம், இரட்சணிய சமய நிர்ணயம், இரட்சணிய மனோகரம், இரட்சணிய குறள் | எச். ஏ. கிருட்டிணப்பிள்ளை |
| திருமாலை, திருப்பள்ளியெழுச்சி | தொண்டரடிப்பொடியாழ்வார் |
| திருவண்ணாமலை, திருவெண்காடு புராணம் | சைவ எல்லப்ப நாவலர் |
| தொன்னூல் விளக்கம், ஞானோபதேசம், பரமார்த்த குரு கதை, சதுரகராதி, திருக்காவலூர் கலம்பகம், தேம்பாவணி | வீரமாமுனிவர் |
| சீறாப்புராணம், முதுமொழிமாலை, சீதக்காதி நொண்டி நாடகம் | உமறுப்புலவர் |
| நந்தனார் சரித்திரம் | கோபாலகிருட்டிண பாரதியார் |
| டம்பாச்சரி விலாசம் | காசி விஸ்வநாதர் |

| | |
|---|---|
| சைவம் பன்னிரு திருமுறைகள் நூல்கள் | |
| அகத்தியம் | அகத்தியர் |
| தொல்காப்பியம் | தொல்காப்பியர் |
| ஐங்குநுறூறு | |
| குறிஞ்சித் திணை பாடியவர் | கபிலர் |
| முல்லைத் திணை பாடியவர் | பேயனார் |
| மருதத் திணை பாடியவர் | ஓரம்போகியார் |
| நெய்தற் திணை பாடியவர் | அம்மூவனார் |
| பாலைத் திணை பாடியவர் | ஓதலாந்தையார் |
| கலித்தொகை | |
| குறிஞ்சிக்கலி பாடியவர் (29 பாடல்கள்) | கபிலர் |
| முல்லைக்கலி பாடியவர் (17 பாடல்கள்) | சோழன் நல்லுருத்திரன் |
| மருதக்கலி பாடியவர் (35 பாடல்கள்) | மருதனில நாகனார் |
| நெய்தற்கலிபாடியவர் (33 பாடல்கள்) | நல்லந்துவனார் |
| பாலைக்கலி பாடியவர் (35 பாடல்கள்) | பெருங்கடுங்கோன் |
| ஆத்திச்சூடி, ஞானக்குறள் (109 பாக்கள்), கொன்றை வேந்தன் – நல்வழி (41 பாக்கள்), மூதுரை (வாக்குண்டாம்) (31 பாக்கள்) | ஔவையார் |
| வெற்றிவேற்கை, நைடதம் | அதிவீர ராம பாண்டியன் |
| அறநெறிச்சாரம் | முனைப்பாடியார் |
| நன்னெறி | சிவப்பிரகாசர் |
| பிரபுலிங்க லீலை, உலக நீதி | உலகநாதர் |
| நளவெண்பா, நளோபாக்கியானம் | புகழேந்திப் புலவர் |
| பதினென்கீழ்க்கணக்கு நூல்களும் பாடியோரும் | |
| திருவருட்பா, ஜீவகாருண்ய ஒழுக்கம், மனுமுறை கண்ட வாசகம்,ஒழிவிலொடுக்கம், தொண்டமண்டல சதகம், சின்மய தீபிகை | வள்ளலார் இராமலிங்க அடிகளார் |
| மாறன் அகப்பொருள், மாறனலங்காரம் | திருக்குருகைப் பெருமாள் |
| வேதாரணியப் புராணம், திருவிளையாடற் போற்றி கலிவெண்பா, சிதம்பரப்பாட்டியல், திருவிளையாடற் புராணம், மதுரை பதிற்றுப் பத்தந்தாதி | பரஞ்சோதி முனிவர் |
| இலக்கண விளக்கப் பட்டியல் | வைத்தியநாத தேசிகர் |

| | |
|---|---|
| மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மை குறம், இரட்டை மணிமாலை, முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், காசிக்கலம்பகம்ஐ சகலகலா வள்ளிமாலை, கந்தர் கலிவெண்பா, மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், திருவாரூர் நான்மணிமாலை, சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பர செய்யுட்கோவை | குமரகுருபரர் |
| கந்த புராணம் | கச்சியப்ப சிவாச்சாரியார் |
| திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ் | பகழிக்கூத்தர் |
| சேக்கிழார் பிள்ளைத்தமிழ் | மீனாட்சி சுந்தரம் பிள்ளை |
| இரண்டாம் குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், தக்கயாகப் பரணி, மூவருலா | ஒட்டக்கூத்தர் |
| கலிங்கத்துப் பரணி, இசையாயிரம், உலா, மடல் | செயங்கொண்டார் |
| திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் | காரைக்காலம்மையார் |
| திருக்குற்றாலநாத உலா, குற்றாலக் குறவஞ்சி | திரிகூட ராசப்பக் கவிராயர் |
| அழகர் கிள்ளை விடு தூது, தென்றல் விடு தூது | பலபட்டைச் சொக்கநாதப் புலவர் |
| திருவெங்கைக் கலம்பகம், திருவெங்கை உலா | சிவப்பிரகாசர் |
| திருவரங்கக் கலம்பகம், திருவேங்கடந்தந்தாதி அஷ்டப்பிரபந்தம் | பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் |
| நாரை விடு தூது | சத்தி முத்தப் புலவர் |
| காந்தியம்மை பிள்ளைத்தமிழ், காந்தியம்மை அந்தாதி | அழகிய சொக்கநாதர் |
| சுகுண சுந்தரி | முன்சீப் வேதநாயகம் பிள்ளை |
| அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ், இலக்கண விளக்க சூறாவளி | சிவஞான முனிவர் |
| கலைசைக் கோவை, கலைசைச் சிதம்பரேசர் பரணி, கலைசைச் சிலேடை வெண்பா, திருவாடுதுறை கோவை, சிவஞான முனிவர் துதி | தொட்டிக் கலை சுப்பிரமணிய முனிவர் |
| குசேலோபாக்கியானம் | வல்லூர் தேவராசப் பிள்ளை |
| திருக்கோவையார் | மாணிக்கவாசகர் |
| தஞ்சைவாணன் கோவை | பொய்யாமொழிப் புலவர் |
| முக்கூடற்பள்ளு | என்னெயினாப் புலவராக இருக்கலாம் |
| சேது புராணம் | நிரம்பவழகிய தேசிகர் |
| இராம நாடகக் கீர்த்தனை | அருணாச்சலக் கவிராயர் |

| | |
|---|---|
| மனோன்மணியம் | பெ. சுந்தரம்பிள்ளை |
| திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் | கால்டுவெல் |
| பெண்மதி மாலை, சர்வ சமயக் கீர்த்தனைகள், பிரதாப முதலியார் சரித்திரம், நீதிநூல் திரட்டு, சுகுண சுந்தரி சரித்திரம் | மாயூரம் வேதநாயகம் பிள்ளை |
| கமலாம்பாள் சரித்திரம் | ராஜம் ஐயர் |
| ரூபாவதி, கலாவதி, மானவிஜயம், நாடகவியல் | பரிதிமாற்கலைஞர் |
| வள்ளித்திருமணம், கோவலன் சரித்திரம், சதி சுலோச்சனா, இலவகுசா, பக்த பிரகலாதா, நல்லதங்காள், வீர அபிமன்யு பவளக் கொடி | சங்கரதாஸ் சுவாமிகள் |
| மனோகரா, யயாதி, சிறுதொண்டன், கர்ணன், சபாபதி, பொன் விலங்கு | பம்மல் சம்பந்தனார் |
| இரட்டை மனிதன், புனர் ஜென்மம், கனகாம்பரம் விடியுமா? | கு.ப. ராஜகோபாலன் |
| கடவுளும் சந்தசாமிப் பிள்ளையும், காஞ்சனை, பொன்னகரம், அகல்யை, சாப விமோசனம் | புதுமைப்பித்தன் |
| மீனாட்சி சுந்தரம்பிள்ளை சரித்திரம், புதியதும் பழையதும், கண்டதும் கேட்டதும், நினைவு மஞ்சரி, என் சரிதம் | உ.வே. சாமிநாத அய்யர் |
| கருணாமிர்த சாகரம் | தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் |
| பெத்லேகம் குறிஞ்சி | வேதநாயக சாஸ்திரி |
| நாக நாட்டரசி, கோகிலம்பாள் கடிதங்கள் | மறைமலையடிகள் |
| மோகமுள், அன்பே ஆரமுதே, அம்மா வந்தாச்சு, மரப்பசு, நளப்பாகம் | தி. ஜானகிராமன் |
| இராவண காவியம், தீரன் சின்னமலை, சுரமஞ்சரி, நெருஞ்சிப்பழம் | புலவர் குழந்தை |
| ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள், சில நேரங்களில் சில மனிதர்கள், ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம், புதிய வார்ப்புகள், ஒரு பிடிச் சோறு, பாரீசுக்குப் போ, குருபீடம், சினிமாவுக்குப் போன சித்தாளு யுகசாந்தி, புது செருப்பு கடிக்கும், அக்னிப் பிரவேசம், உன்னைப்போல் ஒருவன் | ஜெயகாந்தன் |
| பொய்த்தீவு, ஒருநாள், வாழ்ந்தவர் கெட்டால் | க.நா. சுப்ரமணியம் |

| | |
|---|---|
| சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன், அலை ஓசை, கள்வனின் காதலி, தியாகபூமி, மகுடபதி, அமரதாரா, திருடன் மகன் திருடன் | கல்கி |
| அகல் விளக்கு, பெற்ற மனம், கள்ளோ காவியமோ, கரித்துண்டு, நெஞ்சில் ஒரு முள், தம்பிக்கு, தமிழ் இலக்கிய வரலாறு, கயமை, பாவை, வாடா மலர், செந்தாமரை, மண்குடிசை, குறட்டை ஒலி | மு. வரதராசனார் |
| புத்ர, அபிதா | லா. ச. ராமாமிர்தம் |
| குறிஞ்சி மலர், சமுதாய வீதி, துளசி மாடம், பொன் விலங்கு, பாண்டிமா தேவி, மணி பல்லவம், வலம்புரிசங்கு | நா. பார்த்தசாரதி |
| அண்ணாமலை வீரையந்தாதி, சங்கரன் கோயில் திரிபந்தாதி கருவை மும்மணிக்கோவை | அண்ணாமலை ரெட்டியார் |
| பாவை விளக்கு, சித்திரப்பாவை, எங்கே போகிறோம்? வேங்கையின் மைந்தன் வெற்றித் திருநகர், புதுவெள்ளம், பொன்மலர், பெண் | அகிலன் |
| நெஞ்சின் அலைகள், மிஸ்டர் வேதாந்தம், கரிசல், புதிய தரிசனங்கள் | பொன்னீலன் |
| கிருஷ்ண பருந்து | ஆ. மாதவன் |
| பத்மாவதி சரித்திரம், விஜயமார்த்தாண்டம் | மாதவ அய்யர் |
| உதய சந்திரன், நந்திபுரத்து நாயகி, காஞ்சி சுந்தரி | விக்கிரமன் |
| தவப்பயன், புது உலகம், அன்பளிப்பு, சிரிக்கவில்லை, காலகண்டி | கு. அழகிரிசாமி |
| ஒரு புளியமரத்தின் கதை, ஜே.ஜே. சில குறிப்புகள், குழந்தைகள் பெண்கள் ஆண்கள் | சுந்தர ராமசாமி (பசுவய்யா) |
| குறிஞ்சித் தேன், வேருக்கு நீர், கரிப்பு மணிகள் | ராஜம் கிருஷ்ணன் |
| தலைமுறைகள், பள்ளிகொண்டபுரம் | நீல பத்மநாபன் |
| குருதிப்புனல், சுதந்திர பூமி, தந்திர பூமி, வேதபுரத்து வியாபாரிகள் | இந்திரா பார்த்த சாரதி |
| புயலிலே ஒரு தோணி, கடலுக்கு அப்பால் | ப. சிங்காரம் |
| நாளை மற்றுமொரு நாளே, குறத்தி முடுக்கு | ஜி. நாகராஜன் |
| நாய்கள் | நகுலன் |
| தேசபக்தன் கந்தன், முருகன் ஓர் உழவன் | வேங்கடரமணி |

| | |
|---|---|
| பதினெட்டாவது அட்சக்கோடு, இருட்டிலிருந்து வெளிச்சம், கரைந்த நிழல்கள், நண்பனின் தந்தை | அசோகமித்திரன் |
| சாயாவனம், தொலைந்து போனவர்கள் | சா. கந்தசாமி |
| ஸீரோ டிகிரி | சாரு நிவேதிதா |
| ரங்கோன் ராதா, பார்வதி பி.ஏ. நிலையும் நினைப்பும், ஏ? தாழ்ந்த தமிழகமே, ஓர் இரவு, ஆரிய மாயை, வேலைக்காரி, தசாவதாரம், நீதி தேவன் மயக்கம், செவ்வாழை | அறிஞர் அண்ணா |
| குறளோவியம், பராசக்தி, தொல்காப்பியப் பூங்கா, பொன்னர் சங்கர், தென்பாண்டிச் சிங்கம், இரத்தம் ஒரே நிறம், வெள்ளிக்கிழமை, சங்கத்தமிழ், ரோமாபுரிப் பாண்டியன், பூம்புகார், மந்திரிகுமாரி | கலைஞர் கருணாநிதி |
| அர்த்தமுள்ள இந்துமதம், கல்லக்குடி மாகாவியம், இராசதண்டனை, ஆயிரம்தீவு, அங்கையற்கண்ணி, வேலங்குடித் திருவிழா, ஆட்டனத்தி ஆதிமந்தி, மாங்கனி, இயேசு காவியம், சேரமான் காதலி, வனவாசம் மனவாசம் | கண்ணதாசன் |
| முள்ளும் மலரும் | உமாசந்திரன் |
| உயிரோவியம் | நாரண. துரைக்கண்ணன் |
| கல்லுக்குள் ஈரம் | ரா.சு. நல்லபெருமாள் |
| வாஷிங்டனில் திருமணம் | சாவி |
| ஸ்ரீரங்கத்து தேவதைகள், கரையெல்லாம் செண்பகப்பூ, யவனிகா, இரத்தம் ஒரே நிறம் | சுஜாதா |
| மெர்க்குரிப் பூக்கள், இரும்புக் குதிரை, உடையார் | பாலகுமாரன் |
| மானுடம் வெல்லும், மகாநதி, சந்தியா | பிரபஞ்சன் |
| நந்திவர்மன் காதலி, மதுரயாழ் மங்கை, ஆலவாய் அழகன் | ஜெகச்சிற்பியன் |
| வீரபாண்டியன் மனைவி | அரு. ராமநாதன் |
| இன்னொரு தேசிய கீதம், கவிராசன் கதை, கள்ளிக்காட்டு இதிகாசம், தண்ணீர் தேசம், கருவாச்சி காவியம், வில்லோடு வா நிலவே, வைகறை மேகங்கள், திருத்தி எழுதிய தீர்ப்புகள் | கவிஞர் வைரமுத்து |

| | |
|---|---|
| பால்வீதி, ஆலாபனை, சுட்டு விரல், நேயர் விருப்பம், பித்தன் | அப்துல் ரகுமான் |
| கண்ணீர்ப்பூக்கள், சோழநிலா, ஊர்வலம் | மு. மேத்தா |
| கருப்பு மலர்கள் சகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள், கல்லறைத் தொட்டில் | நா. காமராசன் |
| கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள் | மீரா (மீ. ராஜேந்திரன்) |
| ஞான ரதம், சந்திரிகையின் கதை, தராசு, கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் | பாரதியார் |
| கண்ணகி புரட்சி காப்பியம், பிசிராந்தையார், தமிழ் இயக்கம், குடும்ப விளக்குஉ இருண்ட வீடு, அழகின் சிரிப்பு, எதிர்பாராத முத்தம், கதர் இராட்டினப் பாட்டு, சஞ்சீவி பர்வதத்தின் சாரல், பாண்டியன் பரிசு, முதியோர் காதல், குறிஞ்சித் திரட்டு, படித்த பெண்கள், இசையமுது, மணிமேகலை வெண்பா, இளைஞர் இலக்கியம் | பாரதிதாசன் |
| தேன்மழை, துறைமுகம், சுவரும் சுண்ணாம்பும், உதட்டில் உதடு, சாவின் முத்தம் | சுரதா |
| ஊரும் பேரும் | ரா.பி. சேதுப்பிள்ளை |
| தேவியின் கீர்த்தனைகள், மலரும் மாலையும், மருமக்கள் வழி மான்மியம், ஆசிய ஜோதி, குழந்தை செல்வம், உமர் கய்யாம் பாடல்கள் | கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை |
| கோவேறு கழுதைகள் | இமயம் |
| மலைக்கள்ளன், தமிழன் இதயம், சங்கொலி, அவனும் அவளும், என் கதை, கவிதாஞ்சலி, காந்தி அஞ்சலி, தமிழ் வேந்தன், அன்பு செய்த அற்புதம் | நாமக்கல் கவிஞர். வே. ராமலிங்கம்பிள்ளை |
| முருகன் அல்லது அழகு, பெண்ணின் பெருமை, சீர்திருத்தம், கிறித்துவின் அருள் வேட்டல், மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் | திரு.வி. கல்யாணசுந்தரனார் |
| யவனராணி, கடல்புறா, மலைவாசல், இராசநிலம் ஜலதீபம், இராஜபேரிகை | சாண்டில்யன் |
| காந்தார்ச்சாலை, கொல்லிமலைச் செல்வி | பூவண்ணன் |
| மதங்க சூளாமணி, யாழ்நூல் | சுவாமி விபுலாநந்தர் |
| வியாசர் விருந்து, சக்கரவர்த்தி திருமகள், சபேசன் | இராஜாஜி |

| | |
|---|---|
| திருவந்தாதி | நம்பியாண்டார் நம்பி |
| எழிலோவியம், குழந்தை இலக்கியம், தமிழச்சி, தொடு வானம் | வாணிதாசன் |
| மலரும் உள்ளம், சிரிக்கும் பூக்கள், நேருவும் குழந்தைகளும் | அழ. வள்ளியப்பா |
| கரமுண்டார் வீடு | தஞ்சை பிரகாஷ் |
| காடு, பின்தொடரும் நிழலின் குரல், கன்னியாகுமரி, ஏழாவது உலகம், மண், விஷ்ணுபுரம், கொற்றவை | ஜெயமோகன் |
| நெடுங்குருதி, உப பாண்டவம் | எஸ். ராமகிருஷ்ணன் |
| புதிய விடியல்கள், இது எங்கள் கிழக்கு | தாரா பாரதி |
| பூத்தது மானுடம், புரட்சி முழக்கம், உரை வீச்சு | சாலை இளந்திரையன் |
| வாழும் வள்ளுவம், பாரதியின் அறிவியல் பார்வை | வா. செ. குழந்தைசாமி |

**பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல் - பள்ளிப்புத்தகம்- புதியது**

**6 ஆம் வகுப்பு**

| எண் | சொல் | பொருள் |
|---|---|---|
| 1 | நிருமித்த | உருவாக்கிய |
| 2 | விளைவு | விளைச்சல் |
| 3 | சமூகம் | மக்கள் குழு |
| 4 | அசதி | சோர்வு |
| 5 | மேதினி | உலகம் |
| 6 | ஊழி | நீண்ட காலப்பகுதி |
| 7 | உள்ளப்பூட்டு | அறிய விரும்பாமை |
| 8 | ஆழிப்பெருக்கு | கடல் கோள் |
| 9 | தொண்மை | பழைமை |
| 10 | மா | விலங்கு |
| 11 | திங்கள் | நிலவு |
| 12 | கொங்கு | மகரந்தம் |
| 13 | அலர் | மலர்தல் |
| 14 | திகர | ஆணைச்சக்கரம் |
| 15 | பொற்கோட்டு | பொன்மயமானசிகரம் |
| 16 | மேரு | இமயமலை |
| 17 | நாம்நீர் | அச்சம் தரும் கடல் |
| 18 | அளி | கருணை |
| 19 | காணி | நில அளவை குறிக்கும் சொல் |
| 20 | சித்தம் | உள்ளம் |
| 21 | கிணறு | கேணி |
| 22 | மாசற | குறை இல்லாமல் |

| | | |
|---|---|---|
| 23 | தேசம் | நாடு |
| 24 | மாற்றவர் | மற்றவர் |
| 25 | நெறி | வழி |
| 26 | வற்றாமல் | அழியாமல் |
| 27 | ஒப்புரவு | பிறருக்கு உதவி செய்தல் |
| 28 | நந்தவனம் | பூஞ்சோலை |
| 29 | பண் | இசை |
| 30 | இழைத்து | செய்து |
| 31 | மல்லெடுத்த | வலிமைபெற்ற |
| 32 | சமர் | போர் |
| 33 | நல்கும் | தரும் |
| 34 | கழனி | வயல் |
| 35 | மறம் | வீரம் |
| 36 | எக்களிப்பு | பெருமகிழ்ச்சி |
| 37 | கலம் | கப்பல் |
| 38 | ஆழி | கடல் |
| 39 | தண்டருள் | குளிந்த கருணை |
| 40 | கூர் | மிகுதி |
| 41 | ஏவல் | தொண்டு |
| 42 | செமனமயருக்கு | சான்றோருக்கு |
| 43 | உள்ளீடுகள் | உள்ளே இருப்பவை |
| 44 | பார் | உலகம் |
| 45 | பூதலம் | பூமி |
| 46 | கும்பி | வயிறு |
| 47 | முற்றும் | முழுவதும் |
| 48 | நீள் நிலம் | பரிந்த உலகம் |

7 ஆம் வகுப்பு

| எண் | தமிழ் சொல் | பொருள் |
|---|---|---|
| 1 | விரதம் | நோன்பு |
| 2 | பொழிகிற | அறிவு |
| 3 | நெறி | குறிக்கோள் |
| 4 | ஒப்புமை | இணை |
| 5 | முகில் | மேகம் |
| 6 | உபகாரி | வள்ளல் |
| 7 | அற்புதம் | விந்தை |
| 8 | கொம்பு | கிளை |
| 9 | களித்திட | மகிழ்ந்திட |
| 10 | அதிமதுரம் | மிகுந்தசுவை |
| 11 | நச்சரம் | விடமுள்ள பாம்பு |
| 12 | துஷ்டிகேட்டல் | துக்கம் விசாரித்தல் |
| 13 | சிற்றில் | சிறு வீடு |
| 14 | யாண்டு | எங்கே |
| 15 | கல் அளை | கற்குகை |
| 16 | சூரண் | வீரன் |

| | | |
|---|---|---|
| 17 | சாஸ்தி | மிகுதி |
| 18 | விஸ்தாரம் | பெரும்பரப்பு |
| 19 | கழுகு | பறவை |
| 20 | சிங்காரம் | அழகு |
| 21 | பரி | குதிரை |
| 22 | மதலை | யானை முகம் |
| 23 | ஞெகிழி | தீச்சுடர் |
| 24 | அழுவம் | கடல் |
| 25 | சென்னி | உச்சி |
| 26 | கரையும் | அழைக்கும் |
| 27 | உரவுநீர் | பெருநீர் பரப்பு |
| 28 | உரு | அழகு |
| 29 | போழ | பிளக்க |
| 30 | வங்கூழ் | காற்று |
| 31 | நீகான் | நாவாய் ஓட்டுபவன் |
| 32 | வங்கம் | கப்பல் |
| 33 | எல் | பகல் |
| 34 | கோடுவயர் | கரை உயர்ந்த |
| 35 | மாட ஒள்ளெரி | கலங்கரை விளக்கம் |
| 36 | எத்தனிக்கும் | முயலும் |
| 37 | வெற்பு | மலை |
| 38 | நிகர் | சமம் |
| 39 | அன்னதோர் | அப்படிஒரு |

| | | |
|---|---|---|
| 40 | பரிதி | கதிரவன் |
| 41 | கார்முகில் | மழைமேகம் |
| 42 | விச்சை | கல்வி |
| 43 | வைப்புழி | பொருள்சேமித்து வைக்கும் இடம் |
| 44 | கோட்படா | ஒருவரால் மனதில் கொள்ளப்படாது |
| 45 | வாய்ந்து ஈயில் | வாய்க்கும்படி கொடுத்தாலும் |
| 46 | பிரும்மாக்கள் | படைப்பாளர்கள் |
| 47 | நெடி | நாற்றம் |
| 48 | மழலை | குழந்தை |
| 49 | வனப்பு | அழகு |
| 50 | பூரிப்பு | மகிழ்ச்சி |
| 51 | மேணி | உடல் |
| 52 | வண்கீரை | வளமான கீரை |
| 53 | மறித்தல் | தடுத்தல் |
| 54 | வாய்க்கால் | குதிரையின் கால் |
| 55 | மடமகள் | இளமகள் |
| 56 | புகவா | உணவாக |
| 57 | முன்றில் | வீட்டின் முன் இடம் |
| 58 | நல்கினாள் | கொடுத்தாள் |
| 59 | சீலை | புடவை |
| 60 | மணி | முற்றிய நெல் |
| 61 | கழலுதல் | உதிர்தல் |
| 62 | மடை | வயலுக்கு நீர் வரும் வழி |

| | | |
|---|---|---|
| 63 | சாண் | நீட்டல் அளவைப்பெயர் |
| 64 | குழி | நில அளவைப்பெயர் |
| 65 | வையம் | உலகம் |
| 66 | வெய்ய | வெப்பக்கதிர் வீசும் |
| 67 | சொல்மாலை | பாமாலை |
| 68 | இடர்ஆழி | துன்பக்கடல் |
| 69 | தகளி | அகல்விளக்கு |
| 70 | ஞானம் | அறிவு |
| 71 | நாராணன் | திருமால் |
| 72 | வித்து | விதை |
| 73 | ஈன | பெற |
| 74 | நிலன் | நிலம் |
| 75 | களை | வேண்டாத செடி |
| 76 | வன்சொல் | கடுஞ்சொல் |
| 77 | தாரணி | உலகம் |
| 78 | இரக்கம் | கருணை |
| 79 | தத்துவம் | உண்மை |
| 80 | பேதங்கள் | வேறுபாடுகள் |

**8 ஆம் வகுப்பு**

| எண் | தமிழ் சொல் | பொருள் |
|---|---|---|
| 1 | நிரந்தரம் | காலம் முழுமையும் |
| 2 | வைப்பு | நிலப்பகுதி |
| 3 | வண்மொழி | வளமிக்க மொழி |
| 4 | இசை | புகழ் |
| 5 | தொல்லை | பழமை, துன்பம் |
| 6 | சூழ்கலி | சூழ்ந்துள்ள |
| 7 | விசும்பு | வானம் |
| 8 | மயக்கம் | கலவை |
| 9 | மரபு | வழக்கம் |
| 10 | திரிதல் | மாறுபாடுதல் |
| 11 | செய்யுள் | -பாட்டு |
| 12 | வழாஅமை | தவறாமை |
| 13 | தூண்டுதல் | ஆர்வம் கொள்ளுதல் |
| 14 | ஈரம் | இரக்கம் |
| 15 | பயிலுதல் | படித்தல் |
| 16 | நாணம் | வெட்கம் |
| 17 | செஞ்சொல் | திருந்திய சொல் |
| 18 | முழவு | இசைக்கருளி |
| 19 | வள்ளைப்பாட்டு | நெல்குத்தும்போது பாடும் பாட்டு |
| 20 | முகில் | மேகம் |
| 21 | தழாஅல் | தழுவுதல் |
| 22 | கெடிகலங்கி | மிக வருந்தி |
| 23 | கம்பிரமுடன் | முறையாக |
| 24 | சேகரம் | கூட்டம் |
| 25 | வின்னம் | சேதம் |
| 26 | வாகு | சரியாக |
| 27 | காலன் | எமன் |
| 28 | மெத்த | மிகவும் |

| | | |
|---|---|---|
| 29 | காங்கேய நாடு | கொங்கு மண்டலத்தின் நாடுகளுள் ஒன்று |
| 30 | தீர்வன | நீங்குபவை |
| 31 | உவசமம் | அடங்கி இருத்தல் |
| 32 | நிழல் இகழும் | ஒளிபொருந்திய |
| 33 | பேர்தற்கு | அகற்றுவதற்கு |
| 34 | திரியோகமருந்து | மூன்று யோகமருந்து |
| 35 | தெளிவு | நற்காட்சி |
| 36 | திறத்தன | தன்மையுடையன |
| 37 | கூற்றவா | பிரிவுகளாக |
| 38 | பிணி | துன்பம், நோய் |
| 39 | ஓர்தல் | நல்லறிவு |
| 40 | பிறவார் | பிறக்கமாட்டார் |
| 41 | மட்டு | அளவு |
| 42 | வையம் | உலகம் |
| 43 | சுண்ட | நன்கு |
| 44 | பேணுவையேல்- | பாதுகாத்தல் |
| 45 | திட்டுமுட்டு | தடுமாற்றம் |
| 46 | முற்ற | ஒளிர |
| 47 | தடம் | அடையாமை |
| 48 | அகம்பாவம் | அடையாளம் |
| 49 | முரலும் | முழக்கும் |
| 50 | பழவெய் | முதிர்ந்த மூங்கில் |
| 51 | அலந்தவர் | வறியவர் |
| 52 | கிளை | உறவினர் |
| 53 | நோன்றல் | பொறுத்தல் |

| | | |
|---|---|---|
| 54 | செறாஅமை | வெறுக்காமை |
| 55 | போற்றார் | பகைவர் |
| 56 | பேதையார் | அறிவற்றவர் |
| 57 | மறாஅமை | மறவாமை |
| 58 | பொருளை | பொறுமை |
| 59 | வாரி | வருவாய் |
| 60 | எஞ்சாமை | குறைவின்றி |
| 61 | முட்டாது | தட்டுப்பாடின்றி |
| 62 | ஒட்டாது | வட்டம் இன்றி |
| 63 | வைகுக | தாங்குக |
| 64 | ஒதை | ஓசை |
| 65 | வெரீஇ | அஞ்சி |
| 66 | யாணர் | புதுவருவாய் |
| 67 | மறலி | காலன் |
| 68 | கரி | யானை |
| 69 | தூறு | புதர் |
| 70 | அருவர் | தமிழர் |
| 71 | உடன்றன | சினத்து எழுந்தன |
| 72 | வழிவர் | நழுவி ஓடுவர் |
| 73 | பிலம் | மலைக்குகை |
| 74 | மண்டுதல் | நெருங்குதல் |
| 75 | இறைஞ்சினர் | வனங்கினர் |
| 76 | முழை | மலைக்குகை |
| 77 | சீலன் | உயிர் |
| 78 | சபதம் | குளுரை |
| 79 | மோகித்து | விரும்பி |
| 80 | நமன் | எமன் |
| 81 | சித்தம் | உள்ளம் |
| 82 | நம்பர் | அடியார் |
| 83 | நாணமே | கூசாமல் |
| 84 | உய்ம்மின் | ஈடேறுங்கள் |
| 85 | ஈயில் | வழங்கினால் |

| | | |
|---|---|---|
| 86 | பகராய் | தருவாய் |
| 87 | வறுத்தவருக்கு | நீக்கியவருக்கு |

9 ஆம் வகுப்பு

| வரிசை எண் | தமிழ் சொல் | பொருள் |
|---|---|---|
| 1 | குந்த | உட்கார |
| 2 | கந்தம் | மணம் |
| 3 | மிசை | மேல |
| 4 | விசனம் | கவலை |
| 5 | மா | வண்டு |
| 6 | மது | தேன் |
| 7 | வாவி | பொய்கை |
| 8 | தரளம் | முத்து |
| 9 | பணிலம் | சங்கு |
| 10 | வரம்பு | வரப்பு |
| 11 | கழை | கரும்பு |
| 12 | கா | சோலை |
| 13 | குழை | சிறுகளை |
| 14 | மாடு | பக்கம் |
| 15 | கோடு | குளக்கரை |
| 16 | மேதி | எருமை |
| 17 | வேரி | தேன் |
| 18 | சரிவளை | சங்கு |
| 19 | பகடு | எருமைக்கடா |
| 20 | பாண்டில் | வட்டம் |
| 21 | நாளிகேரம் | தென்னை |
| 22 | கோளி | அரசமரம் |
| 23 | சந்து | சந்தனமரம் |
| 24 | யாக்கை | உடம்பு |
| 25 | தாட்டு | முயற்சி |
| 26 | புணரிய்யோர் | தந்தவர் |
| 27 | குழீஇ | ஒன்றுகூடி |
| 28 | தோம் | குற்றம் |
| 29 | கோட்டி | மன்றம் |
| 30 | பொலம் | பொன் |
| 31 | வேதிகை | திண்ணை |
| 32 | தாமம் | மாலை |
| 33 | வசி | மழை |
| 34 | செற்றம் | சினம் |
| 35 | கலாம் | போர் |
| 36 | கூலம் | தானியம் |
| 37 | நவிலல் | சொல்லல் |
| 38 | மாக்கடல் | பெரியகடல் |
| 39 | இயற்றுக | செய்க |
| 40 | தணல் | நெருப்பு |
| 41 | தாழி | சமைக்கும் கலன் |
| 42 | அணித்து | அருகில் |
| 43 | யாண்டும் | எப்பொழுதும் |
| 44 | நாறுவ | முளைப்ப |
| 45 | தாவா | கெடாதிருத்தல் |
| 46 | மைவனம் | மலைநெல் |
| 47 | முருகியம் | குறிஞ்சி பாறை |
| 48 | சிறை | இறகு |
| 49 | சாந்தம் | சந்தனம் |
| 50 | பொலம் | அழகு |
| 51 | கடறு | காடு |
| 52 | பொலி | தானியக்குவியல் |
| 53 | உழை | ஒருவகைமான் |
| 54 | குருளை | குட்டி |
| 55 | உயங்குதல் | வருந்துதல் |
| 56 | கோடு | கொம்பு |
| 57 | இனைந்து | துன்புறுதல் |
| 58 | கல் | மலை |

| | | |
|---|---|---|
| 59 | முருகு | தேன் |
| 60 | மணம் | அழகு |
| 61 | மல்லல் | வளம் |
| 62 | செறு | வயல் |
| 63 | தும்பி | ஒருவகைவண்டு |
| 64 | துவரை | பவளம் |
| 65 | விசும்பு | வானம் |
| 66 | மதியம் | நிலவு |
| 67 | மரை | தாமரை |
| 68 | சதிர் | நடனம் |
| 69 | தெங்கு | தேங்காய் |
| 70 | இசை | புகழ் |
| 71 | மடுத்து | பாய்ந்து |
| 72 | மருப்பு | கொம்பு |
| 73 | வெறி | மணம் |
| 74 | வருக்கை | பலாப்பழம் |
| 75 | சூல் | கரு |
| 76 | மடிவு | சோம்பல் |
| 77 | அடிசில் | சோறு |
| 78 | வட்டம் | எல்லை |
| 79 | கொடியனார் | மகளீர் |
| 80 | மற்றவம் | பெருந்தவம் |
| 81 | வெற்றம் | வெற்றி |
| 82 | புரிசை | மதில் |
| 83 | அணங்கு | தெய்வம் |
| 84 | புழை | சாளரம் |
| 85 | பணை | முரசு |
| 86 | முந்நீர் | கடல் |
| 87 | கயம் | நீர்நிலை |
| 88 | ஓவு | ஓவியம் |
| 89 | நியமம் | அங்காடி |
| 90 | தாவணி | சந்தை |

**10 ஆம் வகுப்பு**

| எண் | சொல் | பொருள் |
|---|---|---|
| 1 | லயம் | சீராக |
| 2 | ப்ராண | உயிர்வளி |
| 3 | நனந்தலை | அகன்ற உலகம் |
| 4 | நேமி | சக்கரம் |
| 5 | கோடு | மலை |
| 6 | நறுவி | நறுமணமுடைய |
| 7 | தூஉய் | தூவி |
| 8 | விரிச்சி | நற்சொல் |
| 9 | சுவல் | தோள் |
| 10. | அகுகுற | அருகில் |
| 11. | முகமன் | விருந்தோம்பல் |
| 12. | அசைஇ | இளைப்பாறி |
| 13. | கடும்பு | சுற்றம் |
| 14. | ஆரி | அருமை |
| 15. | வயிரியம் | கூத்தர் |
| 16. | இறடி | தினை |
| 17. | அல்கி | தங்கி |
| 18. | நரலும் | ஒலிக்கும் |
| 19. | படுகர் | பள்ளம் |
| 20. | வேவை | வெந்தது |
| 21. | மொம்மல் | சோறு |
| 22. | சுடினும் | சுட்டாலும் |
| 23. | மாளாத | தீராத |
| 24. | மாயம் | விளையாட்டு |
| 25. | விசும்பு | வானம் |
| 26. | ஊழி | யுகம் |
| 27. | ஊழ் | முறை |
| 28. | தண்பெயர் | குளிர்ந்த மழை |
| 29. | பீடு | சிறப்பு |
| 30. | ஆர்தருபு | வெள்ளத்தில் மூழ்கி |

| | | |
|---|---|---|
| 31. | ஈண்டி | செறிந்து திரண்டு |
| 32. | தார் | மாலை |
| 33. | முடி | தலை |
| 34. | முனிவு | சினம் |
| 35. | தமர் | உறவினர் |
| 36. | நீபவனம் | கடம்பவனம் |
| 37. | மீனவன் | பாடிய மன்னன் |
| 38. | கவரி | சாமரை |
| 39. | நுவன்ற | சொல்லிய |
| 40. | என்னா | அசைச்சொல் |
| 41. | பண்டி | வயிறு |
| 42. | அசும்பிய | ஒளி வீசுகிற |
| 43. | முச்சி | தலையுச்சிக்கொண்ட |
| 44. | சுண்ணம் | நறுமணப்பொடி |
| 45. | காடுகள் | நெய்பவர் |
| 46. | தூசு | பட்டு |
| 47. | துக்கிர் | பவளம் |
| 48. | வெறுக்கை | செல்வம் |
| 49. | நொடை | விலை |
| 50. | பாசவர் | வெற்றிலை விற்போர் |
| 51. | ஓசுநர் | எண்ணெய் விற்போர் |
| 52. | மன்னீட்டாளர் | சிற்பி |
| 53. | கிழி | துணி |
| 54. | சேக்கை | படுக்கை |
| 55. | யாக்கை | உடல் |
| 56. | பிணித்து | சுட்டி |
| 57. | வாய்ந்த | பயனுள்ள |
| 58. | தயங்கி | அசைந்து |
| 59. | கொம்பு | கிளை |
| 60. | கான் | காடு |
| 61. | தேம்ப | வாட |
| 62. | அசும்பு | நிலம் |
| 63. | ஓர்ந்து | நினைத்து |
| 64. | உவமணி | மலர் |
| 65. | படலை | மாலை |
| 66. | துணர் | மலர்கள் |
| 67. | கடிந்து | விலக்கி |
| 68. | புழை | துளை |
| 69. | உய்முறை | வாழும் வழி |
| 70. | துய்ப்பது | கற்பது |
| 71. | மேவலால் | பெறுதலால், பொருந்துதலால் |
| 72. | கிழக்கு | குணக்கு |
| 73. | மேற்கு | குடக்கு |
| 74. | வடக்கு | வாடை |

11 ஆம் வகுப்பு

| எண் | இடங்கணி | சங்கிலி |
|---|---|---|
| 1 | தரளம் | முத்து |
| 2 | வடாஅரிநாடு | திருமலை |
| 3 | உளய | உள்ளான் என்ற பறவை |
| 4 | கா | சோலை |
| 5 | முகில்தொகை | மேகக்கூட்டம் |
| 6 | மஞ்சை | மயில் |
| 7 | மண்டலம் | உலகம் |
| 8 | தென் ஆரிநாடு | குற்றாலம் |
| 9 | போது | மொட்டு |
| 10 | அலர்ந்து | மலர்ந்து |
| 11 | கவினி | அழகுற |
| 12 | சிதவல் | தலைப்பாகை |
| 13 | தண்டு | ஊன்றுகோல் |
| 14 | தமியர் | தனித்தவர் |
| 15 | முனிதல் | வெறுத்தல் |

| | | |
|---|---|---|
| 16 | துஞ்சல் | சோம்பல் |
| 17 | அயர்வு | சோர்வு |
| 18 | மாட்சி | பெருமை |
| 19 | நோன்மை | வலிமை |
| 20 | தாள் | முயற்சி |
| 21 | பிரசம் | தேன் |
| 22 | தொழுநன் குடி- | கணவனுடைய வீடு |
| 23 | வறன் | வறுமை |
| 24 | உள்ளான் | நினையாள் |
| 25 | மதுகை | பெருமிதம் |
| 26 | கொழுஞ்சோறு | பெருஞ்செல்வம் |
| 27 | இசுக்கும் | நீக்கும் |
| 28 | இழுக்கு | குற்றம் |
| 29 | வினாயவை | கேட்டவை |
| 30 | வரை | மலை |
| 31 | சும்பலை | பேரொலி |
| 32 | புடவி | உலகம் |
| 33 | எய்தல் | அடைதல் |
| 34 | துன்ன | நெருங்கிய |
| 35 | வாரணம் | யானை |
| 36 | பூரணம் | நிறைவு |
| 37 | நல்கல் | அளித்தல் |
| 38 | வதுவை | திருமணம் |
| 39 | கோன் | அரசன் |
| 40 | தென்டிரை | தெள்ளிய நீரலை |
| 41 | விண்டு | திறந்து |
| 42 | மண்டிய | நிறைந்த |
| 43 | தீண் | மார்க்கம் |
| 44 | கொண்மூ | மேகம் |
| 45 | விசும்பு | வானம் |
| 46 | சமர் | போர் |
| 47 | ஆயம் | சுற்றம் |
| 48 | காயல் | வெகிண்டால் |
| 49 | அயன் | பிரமன் |
| 50 | மால் | விஷ்ணு |
| 51 | ஆலாலம் | நஞ்சு |
| 52 | அந்தம் | முடிவு |
| 53 | ஒதுக | சொல்க |
| 54 | முழக்கம் | ஓங்கி வரைதல் |
| 55 | கணிகள் | உலோகங்கள் |
| 56 | மணி | மாணிக்கம் |
| 57 | படி | உலகம் |
| 58 | மீட்சி | விடுதலை |
| 59 | நனவு | குற்றம் |
| 60 | பதி | நாடு |
| 61 | பிழைப்பு | வாழ்தல் |
| 62 | நிரையம் | நாகம் |
| 63 | புரையோர் | சான்றோர் |
| 64 | யாணர் | புதுவருவாய் |
| 65 | தண்டா | ஓயாத |
| 66 | கடுந்துப்பு | மிகு வலிமை |
| 67 | ஏமம் | பாதுகாப்பு |
| 68 | ஓடியா | குறையா |
| 69 | நயந்து | விரும்பிய |
| 70 | நாங்கூழ்ப்புழு | மண்புழு |
| 71 | ஓவா | ஓயாத |
| 72 | பாடு | உழைப்பு |
| 73 | வேதித்து | மாற்றி |
| 74 | தட்டை | பறவைகளை ஒட்டும் கருவிகள் |

**12 ஆம் வகுப்பு**

| வரிசை எண் | தமிழ் சொல் | பொருள் |
|---|---|---|
| 1 | புதுப்பெயல் | புதுமழை |
| 2 | ஆர்கலி | வெள்ளம் |
| 3 | கொடுங்கோல் | வளைந்த கோல் |
| 4 | புலம்பு | தனிமை |
| 5 | கண்ணி | தலையில் சூடும் மாலை |
| 6 | கவுள் | கன்னம் |
| 7 | மா | விலங்கு |
| 8 | அமலன் | இராமன் |
| 9 | இளவல் | தம்பி |
| 10 | நளிர்கடல் | குளிந்தகடல் |
| 11 | துன்பு | துன்பம் |
| 12 | உன்னேல் | எண்ணாதே |
| 13 | அனகன் | இராமன் |
| 14 | அவா | அமாவாசை |
| 15 | உடுபதி | சந்திரன் |
| 16 | செற்றார் | பகைவர் |
| 17 | கிளை | உறவினர் |
| 18 | வாயிலோயே | வாயில் காப்பானே |
| 19 | வள்ளியோ | வள்ளல்கள் |
| 20 | வயங்கு மொழி | விளங்கம் சொற்கள் |
| 21 | வித்தி | விதைத்து |
| 22 | உள்ளியது | வெறுமையான இடம் |
| 23 | உரன் | வலிமை |
| 24 | வறுந்தலை | வெறுமையான இடம் |
| 25 | காவினெம | கட்டிக்கொள்ளுதல் |
| 26 | கலன் | யாழ் |
| 27 | கலப்பை | கருவிகளை வைக்கும்பை |
| 28 | மழு | கோடாரி |
| 29 | மலிவிழா | விழாக்கள் நிறைந்த |
| 30 | கலிவிழா | எழுச்சி தரும் விழா |
| 31 | மட நல்லார் | இளமை பொருந்திய பெண் |
| 32 | ஒலிவிழா | ஆரவார விழா |
| 33 | வேட்டம் | மீன் பிடித்தல் |
| 34 | கழி | உப்பங்கழி |
| 35 | வயல் | |
| 36 | கொள்ளை | விலை |
| 37 | என்றாழ் | சூரியனின் வெப்பம் |
| 38 | விடர | மலைவெடிப்பு |
| 39 | கதழ் | விரைவு |
| 40 | உமணர் | உப்பு வணிகர் |
| 41 | எவ்வளை | ஒளிரும் வளையல் |
| 42 | தெளிர்ப்ப | ஒலிப்ப |
| 43 | விளிஅறி | குரல்கேட்ட |
| 44 | ஞமலி | நாய் |
| 45 | வெரீஇய | அஞ்சிய |
| 46 | மதர்கயல் | அழகிய மீன் |
| 47 | புனவன் | கானவன் |
| 48 | அள்ளல் | சேறு |
| 49 | பகடு | எருது |
| 50 | புரிகுழல் | சுருண்ட கூந்தல் |
| 51 | கழை | மூங்கில் |
| 52 | கண் | கணு |
| 53 | விரல் | ஆடவர் |
| 54 | பூதர் | ஐம்பூதங்கள் |
| 55 | ஓவிய விதானம் | ஓவியம் தீட்டப்பட்ட பந்தல் |
| 56 | நித்திலம் | முத்து |
| 57 | விருந்து | புதுமை |

| | | |
|---|---|---|
| 58 | மண்ணிய | கழுவிய |
| 59 | ஓடை | முகபடாம் |
| 60 | அரசு உலா | பட்டத்து யானை |
| 61 | பரசினர் | வாழ்த்தினர் |
| 62 | பலியம் | இன்னிசை கருவி |
| 63 | வாரம் | தெய்வப்பாடல் |
| 64 | கழஞ்சு | ஒருவகை எடை அளவு |
| 65 | நகை | சிரிப்பு |
| 66 | இளிவிரல் | சிறுமை |
| 67 | மருட்கை | வியப்பு |
| 68 | பெருமிதம் | பெருமை |
| 69 | வெகுளி | சினம் |
| 70 | உவகை | மகிழ்ச்சி |
| 71 | மா | ஒரு நில அளவு |
| 72 | செறு | வயல் |
| 73 | தமித்து | தனித்து |
| 74 | புக்கு | புகுந்து |
| 75 | யாத்து | சேர்ந்து |
| 76 | நந்தும் | தழைக்கும் |
| 77 | வரிசை | முறைமை |
| 78 | கல் | ஒலிக்குறிப்பு |
| 79 | பிரிவு | அன்பு |
| 80 | தப | கெட |
| 81 | பின்டம் | வரி |
| 82 | நச்சின் | விரும்பினால் |
| 83 | உன்னலிர் | எண்ணாதீர்கள் |
| 84 | பிணித்தநனம் | கட்டியமை |
| 85 | நீச | இழிந்த |
| 86 | வல்லியதை | உறுதியை |
| 87 | ஓர்மின் | ஆய்ந்து பாருங்கள் |
| 88 | பாதகர் | கொடியவர் |

| | | |
|---|---|---|
| 89 | குழுமி | ஒன்றுகூடி |
| 90 | ஊன்ற | ஆழ்ந்த |
| 91 | மாற்றம் | சொல் |
| 92 | நுவன்றிலர் | கூறவில்லை |
| 93 | ஆக்கினை | தண்டனை |
| 94 | நிண்ணயம் | உறுதி |
| 95 | கூவல் | கிணறு |
| 96 | ஒண்ணுமோ | முடியுமோ |
| 97 | உததி | கடல் |
| 98 | ஒடுக்க | அடக்க |
| 99 | களைந்து | கழற்றி |
| 100 | திகழ | விளங்க |
| 101 | சேத்தினர் | உடுத்தினர் |
| 102 | சிரத்து | தலையின் பெய்தன் |
| 103 | கண்டகர் | கொடியவர் |
| 104 | வெய்துள | வலிமை |
| 105 | மேதினி | உலகம் |
| 106 | கீண்டு | பிளந்து |
| 107 | வாரிதி | கடல் |
| 108 | சுவறாதது | வற்றாதது |
| 109 | வல்லானை | வலிமை வாய்ந்தவரை |
| 110 | நிந்தை | பழி |
| 111 | பொல்லாங்கு | தீமை கெடுதல் |
| 112 | கவாஅன் | மலைப்பக்கம் |
| 113 | கலிங்கம் | ஆடை |
| 114 | சுரும்பு | வண்டு |
| 115 | பிறங்கு | விளங்கும் |
| 116 | களங்கு | ஒலிக்கும் |
| 117 | வாலுளை | வெண்மையான தலையாப |
| 118 | மருள | வியக்க |

| | | |
|---|---|---|
| 119 | நிழல் | ஒளி வீசும் |
| 120 | நீலம் | நீலமணி |
| 121 | அமர்த்தனன் | விரும்பினால் |
| 122 | சாவ | வில் |
| 123 | மால்வரை | பெரியமலை |
| 124 | சுரவாது | மறைக்காடு |
| 125 | துஞ்சு | தங்கு |
| 126 | போது | மலர் |
| 127 | கஞலிய | நெருங்கிய |
| 128 | நாகு | இளமை |
| 129 | கோடியர் | கூத்தார் |
| 130 | மலைதல் | போரிடல் |
| 131 | உளவு | செறிவு |
| 132 | நுகம் | பாடம் |
| 133 | வளமை | வளமான மலை |
| 134 | ஆலமர் செல்வன் | சிவபெருமான் |